# குறுகிய காலத்தில் வாழையின் விலை மீள வாய்ப்பில்லை

இந்தியாவில், மொத்த பழ உற்பத்தியில் வாழை முதலிடத்திலும், சாகுபடி பரப்பில் மூன்றாவது இடத்தையும் வகிக்கிறது. இந்தியாவில் 2014-15ல் வாழை 28.13 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. தமிழ்நாடு, குஜராத், மகாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடகா மற்றும் அசாம் ஆகியவை வாழை உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களாகும். தமிழ்நாட்டில், வாழை தூத்துக்குடி, திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கரூர், ஈரோடு மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் அதிகளவு பயிரிடப்படுகிறது. வாழை வரத்து சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், பெரம்பலூர் மற்றும் அரியலூர் ஆகிய மாநிலத்தின் பிற மாவட்டங்களுக்கு திருச்சியிலிருந்து அனுப்புப்படுவதால், இது மாநிலத்தின் முக்கிய மையமாக செயல்படுகிறது. மாநிலத்தின் முக்கிய நுகர்வு சந்தைகளில் வெள்ளம் மற்றும் தொடர்மழை காரணமாக வாழைக்கு மிக குறைவான தேவையே உள்ளது. பொதுவாகவே, குளிர்காலங்களில் வாழை நுகர்வு குறைந்து காணப்படும்.

விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் வாழை ரகங்களான பூவன், மற்றும் கற்பூரவள்ளி வாழையின் கடந்த 12 வருடங்களாக நிலவிய மாதந்திர விலை மற்றும் நேந்திரன் வாழையின் கடந்த 8 வருடங்களாக நிலவிய மாதந்திர விலை ஆய்வுகளை கோயம்புத்தூர் சந்தையில் மேற்கொண்டது. ஆய்வு முடிவுகளின் படி, வாழை ரகங்களான பூவன் மற்றும் கற்பூரவள்ளி பண்ணை விலை பிப்ரவரி – மார்ச் 2016ல், சராசரி கிலோவிற்கு ரூ.7-9 வரையும் மற்றும் நேந்திரன் வாழையின் சராசரி பண்னை விலை கிலோவிற்கு ரூ.21-24 வரையும் இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள:</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டுஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்
கோயம்புத்தூர் - 641 003
தொலைபேசி: 0422 -2431405

**மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:**

பேராசிரியர் மற்றும் தலைவர்
பழப்பயிர்கள் துறை
தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003
தொலைபேசி: 0422-6611269